2018 மார்ச் 20]

மா வனம்'' என்கிற திட்டம் மிகச் சிறப்பான முறையிலே வனத் துறையின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போல, ''திண்டி மா வனம்'' என்கின்ற திட்டத்தை மிகச் சிறப்பான முறையிலே அங்கேயிருக்கின்ற தொழிலதிபர்கள், நல்ல உள்ளங்கள் படைத்தவர்களோடு சேர்ந்து, அருமையான மரம் வளர்ப்பு மன்றம் ஒன்று கோடையில் ஆரம்பிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட நன்கொடைமூலம் தண்ணீர்ப் பிரச்சினை மற்றும் பிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு, இப்போது அழகான மரங்கள் வளர்ந்திருக்கின்றன. திருப்பூர் மக்கள் யோசனை சொன்னார்கள். பொருள் உதவியை திண்டிவன மக்கள்தான் ஏற்றுக்கொண்டோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை சபைக்குக் கொடுக்க வேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் கலந்து பேசி, அவர்கள் கேட்டிருக்கின்ற மரம் வளர்ப்பது பற்றி இன்னும் அதிகமாகச் செய்வோம். தேசிய நெடுஞ்சாலை என்றைக்கு வந்ததோ, அன்றைக்கே அத்தனை மரங்களும் பட்டுப் போய், எந்த ஊரிலே, காரிலே போகின்றோம் என்றுகூட அடையாளம் தெரியாத அளவிற்கு உள்ளதால் மரங்கள் எடுத்த இடங்களில் மறுபடியும் மரங்கள் நடப்படும். ஒரு பக்கம் சாலை நன்றாக இருக்கின்றது. இன்னொரு பக்கம் நிழல் இல்லை. இருந்தாலும், அவருடைய கருத்துகள் ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

நியாய விலைக் கடை

14210—டாக்டர் (திருமதி) பூங்கோதை:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

[2018 மார்ச் 20

ஆலங்குளம் தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, பண்டாரக்குளத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகமே தமக்கு உறவு, தமிழினமே தமக்கு அறன் என நினைத்து தவ வாழ்வு வாழ்ந்திட்ட, எங்கள் மனதிற்குள் குடியிருக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அரசை நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சியில் உள்ள பண்டாரக்குளம் பகுதியில் கோவிலூற்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் 141 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை, கடந்த 28–2–2011 முதல் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சற்று மாறி வந்திருக்கிறது. பண்டாரக்குளம் உட்பட என்னுடைய தொகுதியில் 19 கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அரசுக் கட்டடம் அமைத்துத் தரப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, 28–2–2011–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பண்டாரக்குளம், சேரன்மகாதேவி தொகுதியில் இருந்தபோது, 141 அட்டைகள் இருந்தபோதும், விதிகளைத் தளர்த்தி, பகுதி நேர நியாய விலைக் கடையை அமைக்க ஆணையிட்டது டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு என்பதை இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கேள்வி சற்று. . .

2018 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருங்கள். கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்கடாம்பட்டி ஊராட்சி, பண்டாரக்குளத்தில் நியாய விலைக் கடை அமைக்க இவ்வரசு ஆவன செய்யுமா என்றுதான் கேட்டிருக்கின்றீர்கள். நீங்கள் கேட்ட கேள்வி சரியாக வந்திருக்கிறது.*

முற்பகல் 10–15

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *என்னுடைய தவறாக இருக்கலாம். அவசரத்தில் கட்டடம் கட்ட வேண்டுமென்பதைச் சேர்க்காமல் மறந்திருப்பேன். வருடத்திற்கு ஒரு கேள்விதான் அனுமதிக்கிறீர்கள். மிகவும் நன்றி. இந்த வருடம் இரண்டாவது கேள்வி அனுமதித்திருக்கிறீர்கள். இந்த வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

கடையம் ஒன்றியமானது, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது. எங்களுடைய தொகுதியானது, மலைப்பாங்கான இடமும் கிடையாது; Plain–ம் கிடையாது. இரண்டும் கலந்த ஓர் இடம். பல இடங்களில் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். தெற்கு மடத்தூர் ஒன்றியம், காவூரில் 153 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அடுத்த கடை 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதனால், தயவு செய்து விதிகளைத் தளர்த்தி, தெற்கு மடத்தூர் ஒன்றியம், கடையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காவூரில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருந்தேன். அதேபோல, 150 அட்டைகள் மற்றும் இடைவெளி 1.5 கிலோ மீட்டர் இருந்தால் பகுதி நேரக் கடைகளை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. என்னுடைய தொகுதியில் கருத்தலிங்கபுரம், நெல்லையப்பபுரம், பாப்பாக்குடி ஆகிய கிராமங்களில் சுமார் 1,110 அட்டைகள் உள்ளன. அந்த இரண்டையும் முழு நேரக் கடைகளாகப் பிரித்து, நெல்லையப்பபுரத்தையும், கருத்தலிங்கபுரத்தையும் பகுதி நேரக் கடைகளாகப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக அங்கன்வாடிக் கட்டடங்கள், பொதுக் கழிப்பறைகள், சிறு பாலங்கள் கட்டலாம் என்று ஒரு வரையறை வந்திருக்கிறது. தற்போது அங்கன்வாடிக் கட்டடம் கட்டுவதுபோல

பகுதி நேர ரேஷன் கடைகள் அல்லது முழு நேர ரேஷன் கடைகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை விட்டுவிட்டு, வேறு கேள்விக்குப் போயிருக்கிறார். கூட்டுறவுச் சட்ட விதிகளுக்குட்பட்டு அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கடைகளையெல்லாம் பிரித்து அல்லது ஒன்று சேர்த்து, முழு நேர நியாய விலைக் கடைகள் அமைக்க முடியும் என்று சொன்னால், நிச்சயமாக அமைத்துக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இரண்டாவது, எந்தப் பகுதியிலும் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு 654 முழு நேரக் கடைகள், 1,620 பகுதி நேரக் கடைகள் என இப்போது 2,274 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மக்கள் எளிதில் அணுக இயலாத அல்லது வரமுடியாத சூழ்நிலை இருக்கிற மலைப்பிரதேசங்கள் போன்ற இடங்களிலெல்லாம் 41 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் குறித்து உரிய முறையில் ஆய்வு செய்யப்பட்டு, துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2014 ஆம் ஆண்டு கணக்குப்படி 34,841 நியாய விலைக் கடைகள் உள்ளன. ஒருவேளை அதிகமாக இருக்கலாம். அதிலே கிட்டத்தட்ட 32,715 கடைகள் உங்களுடைய கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஒருசில*

2018 மார்ச் 20]

கருத்துகளை இங்கே சொன்னீர்கள். அதாவது நடமாடும் நியாய விலைக் கடைகளைப் பற்றிச் சொன்னீர்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. 2011–ல் 15 கடைகள் என்று தொடங்கி, இன்றைக்கு 42 கடைகளாக இருக்கின்றன. வெறும் மலைப் பிரதேசங்களில் remote places*–என்று மட்டுமல்லாமல், 70 கார்டுகள், 90 கார்டுகள், 95 கார்டுகள் மற்றும் 1 கிலோ மீட்டர் தள்ளிப் போகவேண்டிய குக்கிராமங்களிலும் செயல்படுத்த வேண்டும். பொதுவாக பொருட்களை வாங்கப் போவது பெண்கள்தான். அவர்கள் 20 கிலோ அரிசி, பாமாயில் என எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு பஸ் கிடைக்காமல், ஆட்டோவில் வந்து கஷ்டப்படுகின்றனர். தயவுசெய்து இந்த நடமாடும் நியாய விலைக் கடைகளை பேருந்து வசதி சரியாக இல்லாத குக்கிராமங்களிலும் அதிகரித்திட வேண்டும்.*

இன்னொரு பரவலான கருத்தும் உள்ளது. முன்னர் நீங்கள் 100 சதவிகிதம் புழுங்கல் அரிசிதான் போடுவீர்கள். ஆனால், கடந்த மூன்று மாதங்களாக பார்த்தீர்களென்றால், என்னுடைய தொகுதியில்கூட, நான் கடை நம்பரையும் வைத்திருக்கிறேன். வேண்டுமென்றால் உங்களிடம் கொடுக்கிறேன். 60 சதவிகிதம் புழுங்கல் அரிசியும் 40 சதவிகிதம் பச்சரிசியும் தருகிறீர்கள். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 55.5 சதவிகிதம் பேருக்குத்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இன்றைக்கு பேப்பரிலும் நான் பார்த்தேன். யார் யாருக்கெல்லாம் இந்தத் துறை வாயிலாக உணவுப் பொருட்கள் வேண்டாமோ அதை எழுதிக்கொடுங்கள் என்று ஒரு website *போட்டிருக்கிறீர்கள். இதுவரைக்கும் 9,000 நபர்கள், உணவுப் பொருட்கள் எங்களுக்கு வேண்டாம் என்று அந்தத் திட்டத்திலிருந்து விலகியிருக்கிறார்கள். அந்தப் பொருட்களை என்ன செய்யப்போகிறீர்கள்? அந்தப் பொருட்களைக் கூடுதலாக ஏழைகளுக்குக் கொடுக்கப்போகிறீர்களா? மேலும், ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசிக்குமேல் கொடுக்கப்படுவதில்லை என்று பரவலாக ஒரு குற்றச்சாட்டு வருகிறது. அது உண்மையென்றால் அதனைக் களைந்தெடுக்க வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைத்த தகவல் தவறான தகவல் என்று நான் நினைக்கிறேன். மலைப் பிரதேசங்களில் மட்டுமல்ல, remote area–ஆக உள்ள கிராமங்களில் இன்றைக்கும் நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 285 கிராமங்களில் 27,553 குடும்ப அட்டைதாரர்களுக்காக நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக அவர்கள் இருக்கும் இடங்களிலேயே பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைப்பதற்குத் தற்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் சிறுபழமலை என்ற பகுதியில் 48 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கின்றன. அந்த 48 குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் மாதத்தில் 2 முறை அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுபோய் கொடுக்கிறார்கள். ஆக, இந்தியாவிலேயே, கூட்டுறவுத் துறையின் இம்மாதிரி நடவடிக்கைகள் மூலமாக, பொது விநியோகத் திட்டத்தை சிறப்பான முறையிலே நடத்துகிற ஒரே மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடக்கிற தமிழக மாநிலம்தான் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களில் கடைகள் தேவை என்று குறிப்பிடுவாரேயானால், அந்தந்த இடங்களில், குறிப்பிட்ட கிராமங்களுக்குத் தேவையிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, உரிய வழியில் நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் கொடுக்க முடியுமா என்பதை துறையின் மூலமாக அறிந்து, செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கெனவே, ஒரு நகரும் நியாய விலைக் கடை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும்பட்சத்தில் அந்த இடங்களிலும் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அடுத்ததாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். 20 கிலோ அரிசிக்குமேல் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது தவறான தகவல். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்தியத் தொகுப்பில் இணைந்திருந்தாலும்கூட,

2018 மார்ச் 20]

ஒரு குடும்பத்தில் பெரியவரோ, சிறியவரோ, 4 பேர் இருந்தால் 20 கிலோ அரிசி வழங்குகிறது. 5 பேர் இருந்தால் 25 கிலோ; 6 பேர் இருந்தால் 30 கிலோ; 7 பேர் இருந்தால் 35 கிலோ; 8 பேர் இருந்தால் 40 கிலோ; 10 பேர் இருந்தால் 50 கிலோ அரிசி கொடுக்கிற ஒரே அரசு, அன்னபூரணி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பூங்கோதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கடையில் இதுபோன்று உரிய அளவில் அரிசி கொடுக்க மறுக்கிறார்கள் என்ற சரியான தகவலைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.*

திரு. டி.பி.எம். மைதீன்கான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் மாநகராட்சிப் பகுதி, 16–வது வட்டத்தில், துப்புரவுப் பணியாளர்கள் வசிக்கக்கூடிய அம்பேத்கர் காலனியில் ரேஷன் கடை இல்லாமல் இருக்கிறது. 15–வது வார்டில் இருக்கிற அந்த நியாய விலைக் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை வாங்கவேண்டியிருக்கிறது. ஆனால், இடைப்பட்ட தூரம் அரசினுடைய விதிக்குட்பட்டு இல்லாத காரணத்தினால், அதற்கு விதிவிலக்கு அளித்து, தனியாக ஒரு முழு நேரக் கடையையோ அல்லது ஒரு பகுதி நேரக் கடையையோ அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுமதி கொடுக்கப்பட்டால், கட்டடம் கட்டுவதற்கான நிதியை எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்க நான் தயாராகயிருக்கின்றேன்.*

அடுத்து, மாநகராட்சி சம்பந்தப்பட்ட பிரச்சினை. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரேஷன் கடை அமைப்பதற்காக நாங்கள் கொடுக்கின்ற நிதியிலிருந்து கட்டப்படும் கட்டடங்களுக்கு வாடகை வசூலிக்கப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்கப்படுகிற நிதியில் கட்டப்படுகிற கடைகளுக்கு மாநகராட்சியில் வாடகை வசூலிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 15–வது வார்டில் 2 கடைகள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அவற்றிற்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுப்பதற்கு

நான் தயாராகயிருக்கிறேன். இரண்டு கடைகளுக்குமே இடம் கோரி மாநகராட்சியை அணுகியபோது, இடம் இல்லை என்று சொல்லப்பட்டது. ஆகவே, இந்த அரசு, அதற்கான நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதிகளில் புதிதாக சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற 15–வது வார்டில் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்கின்றன, அருகாமையில் இருக்கிற வார்டில் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அந்தப் பகுதி மக்கள் 17–வது வார்டுக்கோ அல்லது அடுத்த வார்டுக்கோ சென்று பொருட்களை வாங்குவதில் சிரமம் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற 15–வது வார்டில் இடம் கிடைக்கும்பட்சத்தில் அல்லது மாநகராட்சி இடம் கிடைக்கும்பட்சத்தில் கடை அமைக்கப்படும். பகுதி நேரக் கடை அமைப்பதற்கு 150 குடும்ப அட்டைகள் தேவை என்ற சட்ட விதிக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு தவறான தகவலையும் சொல்லியிருக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டிருக்கின்ற கட்டடத்திற்கு மாநகராட்சி இதுவரை வாடகை வசூல் செய்யவில்லை. வரி வேண்டுமானால் போட்டிருப்பார்களேயொழிய, அந்தக் கட்டடத்திற்கு நிச்சயமாக வாடகைக் கட்டணம் வசூல் செய்திருக்க முடியாது. அதுமாதிரி தவறு நிகழ்ந்திருக்குமானால், துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 மார்ச் 20]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறுகின்றபோது, சாலைகள் போடுகின்றபோது மரங்கள் அகற்றப்பட்டதால் ** இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதை மாற்றி, சாலைகளில் மரங்கள் எடுத்த இடங்களில் மறுபடியும் மரங்கள் நடப்படும் என்று திருத்தி, ** என்ற வார்த்தையை நீக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வாறே மாற்றப்படுகிறது. வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1394—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய ஊராட்சிகளில் பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள முசரவாக்கம், திருப்புட்குழி மற்றும் கீழ்அம்பி ஆகிய ஊராட்சிகளிலுள்ள 28 குடியிருப்புகளுக்கும் தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இந்த ஊராட்சிகளில் பாலாறு குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*